# சபை
# உருவாக்குதல்
# கையேடு

# THE POCKET GUIDE TO CHURCH PLANTING

**Author**

**PAM ARLUND**

## பெருக்கத்தின் நோக்கம்
## (Aim to Multiply)

சபை பெருக வேண்டுமென்றால் மக்கள் தொகையைக் காட்டிலும் அதிகமாக வளர்ச்சி அடையவேண்டும். உதாரணத்திற்கு ஒரு சுவிசேஷகர் ஆயிரம் பேரை ஒரு நாள் கிறிஸ்துவுக்குள் வழிநடத்துவார் என்றால் இந்த ஆயிரம் பேர் ஒவ்வொரு நாளும் மற்ற ஆயிரம் மட்டும் வழி நடத்தலாம் இப்படி ஆகும் போது *37000* வருடங்களுக்குள்ளாக இந்த



உலகத்தை இரட்சிப்புக்காக கொண்டுவரமுடியும். இது மற்றொரு கோணத்தில் பார்க்கும்போது ஒரு சீசன் இன்னொரு சீசனை உருவாக்கும் போது மற்றொரு சீசன் இன்னொரு சீசனை உருவாக்கும் போது *37* ஆண்டுகளுக்குள் இந்த உலகத்திற்கு சுவிசேஷத்தை அறிவித்து விடலாம்.

## நம் இருதயம் (Our Heart)

**எளிமையானது** : **(Simple)**

இது உன்னால் முடியும் இந்த தத்துவங்கள் மிகவும் எளிதானது சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கும் நகர்புறத்தில் உள்ளவர்களுக்கும் அல்லது மற்றவர்களுக்கும் அனுபவம் உள்ளவர்களுக்கும் அல்லது அனுபவம் இல்லாதவர்களும் மிகவும் எளிமையாக காணப்படுகிறது பெரிய ஒரு தாக்கத்தை இந்த சிறிய சபை பெருகுவதின் மூலமாக வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கிறது

முக்கிய காரணம் : (Cutting edge)


நீங்கள் ஒரு மிகப்பெரிய தாக்கத்தை மக்கள் மத்தியில் உண்டாக்க கூடியவர்களாக இருக்கிறீர்கள். அதுவும் தேவனுக்கு தூரமாய் இருக்கிற மக்கள் மத்தியில் சபையை ஆரம்பிப்பது அது உலகமுழுவதும் பெருகுவதும் மிகவும் விசேஷமான வழிகளிலே இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்து அந்த தாக்கத்தை உண்டாக்கக்கூடியவர்களாயிருக்கிறீர்கள்

தொடர்வண்டி :

நீங்கள் இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் வார்த்தைகளை அறிவிப்பதில் பங்கெடுக்க கூடியவர்களாக இருக்கிறீர்கள் ஒருமுறை அது சபை உருவாகி இந்த சபை இன்னும் பல சபைகளை உருவாக்கக்கூடியதாயிருக்கிறது அதனுடைய நலனுக்காக நாம் ஒரு முயற்சியை மாத்திரம் வைத்திருக்கிறோம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இந்த சபையை ஆரம்பிக்கிறது . வேகமாக வளர கூடியதாக இருக்கிறது. நல்லது நான் அதை கடடுப்படுத்துவதில்லை பரிசுத்த ஆவியானவரே அதை செயல்படுத்தி வருகிறார்.

பல வர்ணம் மற்றும் குளிர்ந்த நிலை

இதை எவரும் எங்கே வேண்டுமானாலும் செய்ய



முடியும் சிறிய சபை எந்த ஒரு கலாச்சார மக்கள் மத்தியிலும் பலதரப்பட்ட மக்கள் மத்தியிலும் கல்லூரிகளிலும் படித்தவர்கள் மத்தியிலும் அல்லது ஆப்பிரிக்காவில் உள்ள கிராமங்களிலும் அல்லது ஆசியாவில் உள்ள மக்கள் மத்தியிலும் பலதரப்பட்ட வியாபாரிகள் மட்டும் அல்லது பல கடைகளிலும் எங்கே வேண்டுமானாலும் எனது சாதாரணமாக கூடிவருகிறார்கள் அவர்களை ஏசுவை சந்திக்க ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் அல்லது சபையை உருவாக்க வேண்டும்


செயல்படுத்துவதற்கு உண்டான செயல்பாடு :

ஒருவேளை புதிய ஏற்பாட்டில் உடைய சட்டதிட்டங்களுக்கு அப்பாற்பட்டு நாம் வாழ்ந்து

கொண்டிருக்கலாம் சபை வளரக் கூடிய ஒன்றாக இருக்கிறது அது சுவிசேஷத்தின் நிமித்தமாக ஒரு சபையை உருவாக்கக் கூடியதாக இருக்கிறது அதாவது அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில ஆரம்பிக்கப்பட்ட சபையை போன்றதாகும்.

வாழ்க்கைமுறை

நீங்கள் தெய்வீக சேவையின் ஒரு பகுதியாயிருக்கிறீர்கள் இருக்கும் இடத்தில் சமுக



சேவைகளை ஆரம்பித்து உங்களை வெளிபடுத்தவேண்டியவர்களாய் இருக்கிறீர்கள்.

## அடிப்படை விளக்கம்

சீஷர்களை உருவாக்க போகிற நாம் தலைவர்களை உருவாக்கப் போகிற நாம் அதன்மூலம் சபைகளை உருவாக்கப் போகிற அவர்களைப் பற்றியதான தெளிவான நம்பிக்கை நமக்கு தேவை. ஐன்ஸ்டீன் சொல்கிறார் சிறிய அளவில் உன்னால் விளங்கச் செய்ய முடியவில்லையென்றால் அது போதுமான அளவுக்கு புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம் அவர்கள் வேதத்தின் ஆழமான அடிப்படையான காரியங்களை அறிந்து கொள்ளாவிட்டாலும் அவர்களுடைய சிறிய முயற்சியினால் தேவையானவற்றை செய்யக் கூடியவர்கள் இருக்கிறார்கள்

சீசன் :

ஒரு மனிதன் இயேசு கிறிஸ்துவின் கட்டளைகளுக்கும் கற்பனைகளுக்கும் கீழ்ப்படிந்து அவர்மேல் வைத்திருக்கிற அன்பினால் வாழ்ந்து கொண்டிருப்பான்

சபை :

ஒரு கூட்டம் மக்கள் இயேசுகிறிஸ்துவினுடைய கட்டளைகளுக்கும் கற்பனைகளுக்கும் கீழ்ப்படிந்து அவர் மேல் அன்பு வைத்து வாழ்ந்து கொண்டிருப்பார்கள் அந்த கூட்டத்திற்கு சபை என்று பெயர்.

தலைவன்:

ஒரு மனுஷன் இயேசுகிறிஸ்துவினுடைய கற்பனைகளுக்கும் அவருடைய அன்பிற்கும் கீழ்ப்படிந்து மற்றவர்கள் அவருடைய கட்டளைகளை கை கொள்வதற்கு உதவி செய்வார் அவர் தலைவன் எனப்படுவார்


## ஐந்து படிகள் (Five steps)

சபை உருவாக்குவது ஐந்து படிகள் கொண்டதாகும்.

1. ஜெபம் ( **Pray** )
2. சந்திப்பு **(Meet)**
3. உருவாக்குவது **(Make)**
4. கூடிவருதல் அல்லது ஒன்று கூட்டுதல் **(Gather)**
5. பெருக செய்வது **(Multiply)**

1. ஜெபம் . **(Pray)**

ஜெபம் என்பது சாதாரணமாக அல்ல இ மக்கள் உணர்ந்து கொள்ளுகிற அளவுக்கு நாம் உபவாசித்து ஜெபிக்க கூடியதாய் இருக்க வேண்டும் . நடந்து கொண்டு ஜெபிக்க வேண்டும் .தேவன் என்ன சித்தம் அவர்கள் மீது வைத்திருக்கிறார் என்பதை உணர்ந்து ஜெபிக்க வேண்டும். நாம் சந்திக்க



கூடியதான மக்களுடைய உள்ளத்தையும் சிந்தையையும் திறக்கும்படி தேவனிடத்தில் ஜெபிக்க கூடியவர்களாக இருக்க வேண்டும். அவர்களுடைய கலாச்சாரத்தில் தேவனுடைய அன்பை புரிந்து கொள்ளுகிற தன்மையை பெற்றுக் கொள்ளும்படி ஜெபிக்கவேண்டும். மக்களை சந்திப்பதற்கு தேவன் தரும் திட்டங்களை பெற்றுக் கொள்ளும்படியாக ஜெபிக்க வேண்டும் . லூக்கா *10: 1 - 24* வசனங்கள் தினமும் அந்த நாள் துவங்குவதற்கு முன்பதாக அந்த நாளிலே நாம் ஜெபித்து அந்த நாளை வெற்றியுள்ள நாளாக வாழ்ந்து காட்ட வேண்டும் .

*2.* **சந்திப்பு (Meet)**

மக்கள் எங்கு கூடி இருக்கிறார்களோ அவர்களை சென்று சந்திக்க வேண்டும். கிறிஸ்துவர்கள் அல்லாதவர்களை போய் சந்திக்க வேண்டும். நம்முடைய உணர்வுபூர்வமான கிரியைகளையும் கோபத்தையும் தள்ளிவைத்துவிட்டு அவர்களை சந்திப்பதற்கு நேரத்தையும் உழைப்பையும் கொடுக்க வேண்டும். மக்களிடத்தில் இயேசுவை அறியாதவர்களை தொடர்ந்து சந்திக்க வேண்டும். சந்திக்கும் மக்களை அவர்களுடைய நிலைமையை அதிகமாக எடுத்து

சொல்லாதபடி சந்திக்க வேண்டும். மற்றும் அவர்களுடைய நண்பர்களையும் சந்திக்க வேண்டும்

3. உருவாக்குவது **(Make)**

உருவாக்குவது என்பது சீஷர்களை உருவாக்க வேண்டும். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தில் நம்மை முதலீடு செய்யவேண்டும். அவர்கள் இயேசுவை ஏற்றுக் கொண்ட பின்புஇ ஜெபிக்க வந்தபின்புஇ அவர்களிடத்தில் நம்முடைய உழைப்பை முதலீடு செய்யலாம் என்று தாமதம் செய்யாத படிக்கு நாம் நம்முடைய பிரயாசத்தை முதலீடு செய்ய வேண்டும். ”சீஷர்களை உருவாக்குதல்" அது சுவிசேஷத்தின் மூலமாகவும் உண்மையான அன்பினாலே அவர்களை விசாரிப்பதால் அவர்களை சீடர்களாக மாற்ற வேண்டும். சீஷத்துவம் ஆக்குவது என்பது இயேசுவைக் குறித்து அறிவிப்பது மட்டும் அல்ல அவரைக் குறித்து தனிப்பட்ட விசேஷமான காரியங்களை அறிந்து கொள்வதும் கற்றுக் கொள்வதும் அவருடைய அன்பை அறிந்து கொள்வதாகும். அதுமட்டுமல்லாது ஆவிக்குரிய வளர்ச்சியும் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் என்பதைப் பற்றியும் ஒரு சிறிய ஐக்கியமாய்

இருக்கிறோம். ஆவிக்குரிய ஐக்கியமாய் இருக்கிறோம் என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

*4.* **கூடிவருதல் (Gather)**

கூடி வருவது ஆவிக்குரிய காரியத்தை அறிந்து கொள்வதற்கு மட்டுமல்லாது இயேசுவை தேடுகிற ஒவ்வொருவரும் கூடிவர அனுமதிக்க வேண்டும். அவர்களை உற்சாகமூட்டி ஜெபத்திலும் அன்புடைய வார்த்தையை ஆண்டவருடைய வார்த்தையை கற்றுக் கொள்வதற்கும் அனுமதிக்க வேண்டும். சில நேரங்களில் எப்பொழுது இ எங்கு கூடி வரவேண்டும் என்பதை முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். இயேசுவினுடைய வசனங்களையும் அவர் மூலமாய் நடைபெற்ற அற்புதங்களையும் அவர்களுக்கு அந்த நேரத்தில் முன்வைத்து கற்று கொடுக்க வேண்டும். கூடி வருகிறவர்கள் நான் இயேசுவுடைய சீசன் ஆக மாறிவிட்டேன் என்று சொல்வார்கள் என்று எதிர்பார்க்காத கூடி வரவேண்டும். நம்முடைய கூடிவரும் நேரத்தை சமுதாயத்தை கட்டுவதற்காக சில நேரங்களில் பகிர்ந்து கொள்ளக் கூடியதாகும். சில நேரங்களில் உணவு கொடுத்து பகிர்ந்து கூடிவருவதும் நல்ல நோக்கமாய் இருக்கும். இயேசு சொன்னார் எங்கே ரெண்டு அல்லது மூன்று பேர் என் நாமத்தினிமித்தம்

கூடி வருகிறீர்களோ அவர்கள் மத்தியில் நான் இருப்பேன். இதுதான் சபை. இதுதான் மிக முக்கிய நோக்கமாய் காணப்படுகிறது மக்கள் கூடி வர ஆரம்பமாவது அதுதான் சபை உருவாக்குவதில் ஆரம்பமாக காணப்படுகிறது .

5. பெருகுவது **(Multiply)**

பெருக்குவதற்காக அதற்குண்டான திட்டங்களை வகுக்க வேண்டும். ஆரம்பம் முதற்கொண்டு புதிய ஆத்துமாக்களை உற்சாகப்படுத்தி அவர்களை வெளியில் ஊழியங்கள் மற்ற விசேஷ கூட்டங்களுக்கும் பொறுப்புள்ளவர்கள் ஆக்கவேண்டும். ஊழியர்கள் அவர்களுக்கு பின் பக்கமாய் இருந்து அவர்களை உற்சாகப்படுத்தி நல்ல முறையில் இ அவர்களுடைய ஆவிக்குரிய வரங்களை செயல்படுத்த உற்சாகப்படுத்த வேண்டும் அடிக்கடி கூடிவந்து அவர்களை உற்சாகப்படுத்தும் புதிய குழுக்களை கூடிவர செய்வதற்கான திட்டங்களையும் வகுக்க வேண்டும்.

# <u>வலை பின்னல் அமைப்பில் பணி செய்தல்</u>
**(Work with in Networks )**

விசுவாசிகளை தொடர்ந்து நாம் உற்சாகப்படுத்த கூடியவர்களாய் இருக்கவேண்டும். அவர்களுடைய நண்பர்களோடு அவருடைய நண்பர்களின் நண்பர்களோடு. ஒருவேளை ஒரு புதிய ஆத்துமாவே கொண்டுவருவார் என்றால் நாம் அந்த புதிய நண்பர்களை சந்தித்து அவர்கள் இருக்கும் இடத்தில் சென்று அவர்களை சந்திக்க வேண்டும். சில நேரங்களில் குறிப்பிட்ட சதவீத மக்கள் ஒருவிதமான அடிமைத்தனத்தை உடைய நிலைமையினால் தங்களுடைய பழைய நண்பர்களை விட்டு விலகி விடுவார்கள் ஆனால் அதிகமாக அப்படி அல்ல. மக்களை சந்தித்து யார் நம்மை அறிமுகப்படுத்துகிறார்களோ அவர்களின் மூலம் அவர்களோடு கூட இருக்கிற அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவை பற்றி அறிவிக்கக் கூடியவர்களாக இருக்கிறோம் இந்த முறையின் மூலமாக புதிய நண்பர்களின் குழுக்களை நாம் கண்டுபிடிக்கவும் அவர்கள் மூலம் சந்தோஷப் படவும் முடிகிறது.

## வழிகாட்டலின் தொடர்ச்சி
**(Mentoring Chains)**



ஒருவேளை நம்மை சுற்றி ஜனங்கள் இருப்பார்கள் என்றால் அவர்களை உபயோகப்படுத்தவும் உற்சாகப்படுத்தவும் அவர்கள் மூலம் ஒரு புதிய சங்கிலித்தொடர் நிகழ்வை ஏற்படுத்தவும் **2 தீமோத்தேயு 2:2** அனேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்க உண்மையுள்ள மனிதர்களிடத்தில் ஒப்புவி.

பவுல்
↓
தீமோத்மேயு
↓
அதற்கேற்ற ஜனங்கள்
↓
மற்றவர்கள்

நீ
↓
உன்னுடைய சீசன்
↓
நீ உருவாக்கிய சீசன் உடைய சீசன்
↓
நீ உருவாக்கிய சீசன் உடைய சீசன் உடைய சீசன்

## அதிகாரம் கொடுத்தல் (Empower others)

ஒருவேளை நாம் நம்முடைய ஊழியத்தின் மூலமாக ஒரு சபையை உருவாக்கினாலும் மற்றவர்கள் ஊழியம் செய்ய அதிகாரம் கொடுபதற்க்கென்று கவனமாக இருக்க வேண்டும். எபேசியர் **4:** ***11-13***

" மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனை மற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமை பட்டவர்களாக கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராக வரைக்கும் பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும் அவர் சிலரை அப்போஸ்தலராகவும் சிலரை தீர்க்கதரிசிகளாகவும் சிலரை சுவிசேஷகராகவும் சிலரை மேய்ப்பராகவும் சிலரை



போதகராகவும் ஏற்படுத்தினார்."

ஜனங்கள் அவர்கள் தங்களுடைய பயிற்சியை முடித்த பிற்பாடு மற்றவர்களை உற்சாகப்படுத்தவும் இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிக்கவும் அனுப்பலாம் என்று நாம் காத்திருக்கக் கூடாது உடனடியாக அவர்கள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிக்க அதிகாரம் கொடுக்கவேண்டும். ஏனென்றால் தேவன் இளைய மற்றும் அனுபவம் இல்லாத மக்கள் மூலம் வல்லமையான கிரியைகள் நடப்பித்தார் அவர் தகுதி இல்லாதவர் என்று நாம் நினைக்கக் கூடாது.

ஒரு வேளை அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் சுவிசேசத்தைப்பற்றி சொல்ல தெரியவில்லை என்றாலும் மற்றவர்களை இயேசுவினிடம் வழிநடத்ததெரியவில்லை என்றாலும். அவர்களின் சொந்த அனுபவதிதின் மூலம் இயேசுவின் அன்பை பகிற்ந்து கொள்ள உற்சாகபடுத்தவேண்டும்.

பெரிய அளவிளான பொறுப்புகளை பின்நாட்களில் பெற்றுக்கொள்வார்கள். ஆனாலும் நாம் நம்மிடம் கேட்டுக்கொள்கிற கேள்வி என்னவென்றால்

**“எந்த வகையான சேவைசெய்ய இவர்களை இந்நநாளில் நான் பக்குவபடுத்த முடியும்?.**

## ஆராதனை நடத்தும் முறை (Running a Church Meeting)

ஆராதனை நடத்தும் முறை ஏ பி சி என்ற வடிவத்தில் கொடுக்கப்பட்டுள்ளது இது மிகவும் முக்கியமான மாதிரி வடிவம் ஆகும். A.B.C என்றுஇந்த மாதிரி வடிவம் சீஷத்துவத்தின்அடிப்படை திட்டத்திற்கு உதவியாக இருக்கிறது. இது கற்றுக் கொள்வதற்கும் செயல்படுத்துவதற்கும் மாற்றிக் கொள்வதற்கும் மிகவும் எளிமையாக இருக்கிறது.

1. **A --Ask** என்பதற்கு ”எதைக் கேட்க வேண்டும் எந்த காரியத்திற்காக முதலில்நன்றி சொல்கிறீர்கள் ? . தேவனுக்கு நன்றி சொல்வதற்கும் விண்ணப்பங்களை ஏர்எடுப்பதற்குநேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் .

2. உன்னுடைய பாவத்தையும் அறிக்கையிட விரும்புகிறாயா?. அடுத்து சிறிய ஜெபத்தை அனைவருக்காகவும் எடுக்க வேண்டும் .

3. கடந்த வாரத்தில் வேதாகம பள்ளியில் கற்றுக்கொண்ட காரியம் எப்படி உன் வாழ்க்கையில் செயல்படுத்த போகிறாய் ?. என்பதை தெரிவிக்க வேண்டும்

**B.BIBLE STUDY**

B- என்ற ஆங்கில எழுத்து வேதபாடம் மூன்று கேள்விகளை கேட்கலாம்

1. இயேசு கிறிஸ்துவை பற்றி என்ன சொல்லுகிறது .

2.இந்தப் பகுதி நம்மை குறித்து என்ன சொல்கிறது .

3.மூன்றாவது இதைப்பற்றி நீ என்ன செய்யப் போகிறாய் .இதன் மூலம் உன்னுடைய வாழ்க்கையில் எப்படி நடைமுறைப்படுத்தப் போகிறாய் .

**C.- COMMIT**

மூன்றாவது அற்பணிப்பு


இது மூன்று பகுதிகளைக் கொண்டது.

1. **ஜெபம்** : குறைந்தபட்சம் குறைந்தது சத்தியத்தை அறிவித்து அவர்களுக்கு ஜெபிப்பது

2. **கீழ்ப்படிதல்**. என்னுடைய வாழ்க்கையில் மாற்றம் உருவானது நான் என்ன கற்றுக் கொண்டேன் என்பதை பகிர்ந்து கொள்வது பின்னர் அதை தெரிவித்து ஜெபிப்பது

3. **நடைமுறைப்படுத்துவது**: ஒவ்வொரு வேலையிலும் ஒரு சில நிமிடங்கள் நாம் கற்றுக் கொண்ட காரியங்களை அறிந்துகொண்ட காரியங்களை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொண்டு அவர்களுக்காக ஜெபிப்பது.

# அதிகாரத்தின் மூன்று நிலைகள்
# ( Three Levels of Authority)



இந்த அதிகாரத்தின் மூன்று நிலைகளில் புதிய ஆத்துமாக்களுக்கு கற்றுக் கொடுக்கும் பொழுது அவர்கள் சரியான தீர்மானம் எடுப்பதற்கு கற்றுக்கொடுக்கவேண்டும்

**முதல் நிலை** :

புதிய ஏற்பாட்டு கட்டளைகள் :

தேவனுடைய கட்டளைக்கு எந்தவிதமான எதிர்ப்பும் இல்லாதபடிக்கும் வாக்குவாதம் இல்லாதபடிக்கும் கீழ்ப்படிய வேண்டும் ஏனென்றால் அவர் தான் நம்முடைய மேம்பட்ட அதிகாரமுள்ள மேலான தளபதியாய் விளங்குகிறார்

சபை என்பது முழுமையாக கிறிஸ்துவினாலும் புதிய ஏற்பாட்டின் அப்போஸ்தலர்களின் ஊழியத்தினாலும் அவர்களின் இரத்தத்தினாலும் உருவாக்கப்பட்டதாகும்.

இரண்டாம் நிலை

புதிய ஏற்பாட்டின் வழக்கம் . கட்டளை அல்ல

ஒரு கிறிஸ்தவனுக்கு புதிய ஏற்பாட்டு காரியங்களை வழி நடப்பதற்கு தன்னுடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதற்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது அது அதிகாரத்தினால் அல்ல. அப்போஸ்தலர்கள் அதை தங்களுடைய வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தினார்கள் மட்டுமல்லாமல் அதை நமக்கென்று நியமித்துக் கொடுத்தார்கள்

மூன்றாம் நிலை

நம்முடைய பழக்கவழக்கங்கள் புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் இல்லை.

நாம் ஒரு போதும் நாம் அறியாத சம்பிரதாயங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று சொல்லி கட்டுப்படுத்தக்

கூடாது பெரும்பாலான சம்பிரதாயங்கள் நல்லவைகள். சம்பிரதாயங்கள் புதிய ஏற்பாட்டு கட்டளைக ளுக்கு ஏற்றாதாக இலலை.

ஏழு விதமான அடிப்படை கட்டளைகள்

புதிய ஆத்மாக்களுக்கு ஏழுவிதமான அடிப்படை கட்டளைகளை நாம் கற்றுக் கொடுக்க வேண்டும் இயேசுக்கிறிஸ்து 150க்கும் மேற்பட்ட கட்டளைகளை கொடுத்திருக்கிறார் ஆனால் நாம் ஏழுவிதமான கட்டளைகளை கொடுப்பது அவர்கள் சரியான வழியில் செல்வதற்கு ஏதுவாக அமையும் இதைப்பற்றி நாம் இன்னும் அதிகமாக படித்துக்கொள்ளலாம்

1. மனந்திரும்புதல்
2. ஞானஸ்தானம்
3. அப்பம் பிட்குதல் (கர்த்தருடைய பந்தியில் ஐக்கியபடுவது
4. அன்பு (மன்னிக்கும் தன்மை உடையவை)
5. ஜெபம் ( இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபிப்பது )
6. கொடுப்பது
7. சீஷர்களை உருவாக்குவது உருவாக்குவது.

# S.A.V.E

நாம் அதிகமாய் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம் நம்முடைய வேலை மற்றவர்களை உற்சாகப்படுத்தி அடுத்த கட்டத்திற்குள் ஆக கொண்டு செல்வதுதான். அதற்காக நாம் இந்த முறைகளை பயன்படுத்தும்பொழுது நமக்கு மிகுந்த உபயோகமாய் இருக்கும் இது ஆரம்பம் முதற்கொண்டு அவர்களை வழி நடத்துவதற்கு உதவியாக இருக்கும்

காட்டுதல் (show)

ஒருவர் அதிக அறிவோடு கூட ஒரு விசுவாசி இருப்பார் என்று சொன்னால் அவருடைய அனுபவத்தை அவர்களுக்கு காட்ட வேண்டும் அந்த அனுபவம் புதிதாய் வருபவர்களுக்கு மிகுந்த பிரயோஜனமாக இருக்கும். அவருடைய சில அறிவு அவர்களை கீழ்ப்படிதல் உள்ளாக வழிநடத்தும். சீஷத்துவம் என்பது கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்ப்படிவது அதனுடைய மிகப்பெரிய நோக்கமாக அமைகிறது.

## இணைந்து (Assist)

இளைய விசுவாசி அனுபவம் உள்ள முதிர்ந்த விசுவாசியால வழி நடத்தப்படவேண்டும் இந்த காலகட்டம் இந்த புதிய அல்லது இளைய விசுவாசிக்கு உபதேசிப்பது வேதத்தைப் பற்றியதான காரியங்களை கற்றுக்கொடுப்பதுமாக இருக்கும். முதிர்ந்த விசுவாசி அவர்களை சந்திக்கும் பொழுது இளைய விசுவாசிக்கு போதிக்க கூடியவராக இருப்பார். இந்த புதிய



அல்லது இளைய விசுவாசி மற்றவர்களுக்கு சொல்லும் பொழுது முதிர்ந்த விசுவாசிகளுடைய வழியிலே நடத்தக்கூடாது ஆனால் இளைய விசுவாசி சரியாக அவர்களுக்கு எடுத்துச் சொல்ல முடியாமல் போனாலும் அவர்களைத் தொடர்ந்து புதிதாய் அவர்களுக்கு அவர்களுடைய இருதயம் திறக்கப்பட அவர்களுக்கு உபதேசிக்க கற்றுக்கொடுக்க வேண்டும்

பார்வை (View)

முதிர்ந்த விசுவாசி இளைய விசுவாசிகளை கவனமாக வழிநடத்த வேண்டும் முதிர்ந்த விசுவாசிகளும் இளைய விசுவாசிகளுடைய தன்னம்பிக்கையை குறைக்காது அவர்களை உற்சாகப் படுத்துவதோடு மட்டுமல்லாமல் புதிய வழி நடத்துவதாகவும் புதிய ஒரு இடத்தை தெரிந்து எடுத்து கொடுத்து சமுதாயத்தை வழிநடத்த கற்றுக்கொடுக்க வேண்டும். முதிர்ந்த விசுவாசி இளைய விசுவாசி சந்தித்த பிற்பாடு அவர்களிடத்தில் இருந்தது அவர்களுடைய தனிப்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்

வெளியேறுதல் (Exit)

முதிர்ந்த விசுவாசி வெளியேறக்கூடிய அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும். புதிய விசுவாசிகளுக்கு நடத்த அவர்களுக்கு அனுமதி கொடுத்து அவர்களுக்கு பக்கபலமாய் இருந்து அவர்களை வழிநடத்த கற்றுக்கொடுக்க வேண்டும். அப்பொழுது இளம் விசுவாசியும் அதை திறமையாக நடத்த தேவையான

அன்பை அவர்களுக்கு கொடுத்து மட்டுமல்லாமல் மற்றவர்களுடைய தயவு இல்லாதபடி நடத்த திறமை கொண்டவராக இருக்கிறார். ஆனாலும் முதிர்ந்த விசுவாசி இளைய விசுவாசிகளுக்கு தொடர்ந்து நல்ல ஒரு ஐக்கியதோடு கூட காணப்படவேண்டும் இதில் தவறாமல் இருக்க வேண்டும்.

இளைய விசுவாசிகளுக்கு நடத்த வழி கொடுப்பதற்காக சில நேரங்களில் அவர்கள் *தனித்து* நிற்பதற்காக சில காலங்கள் எடுத்துக்கொள்ளும். ஆனாலும் ஒரு சில மாதங்களுக்குள்ளாக புதிய தலைவரை ஏற்படுத்தவும் அவர் தானாக தன்னுடைய அனுபவத்தோடு கூட செயல்படுத்தவும் கற்றுக்கொடுக்க வேண்டும் இந்தவிதமான அந்த புதிய விசுவாசி தனிமையாக நின்று அவற்றை செயல்படுத்த பக்குவப்பட கூடியவராக இருக்கிறார் விசுவாசிகள் அவர்களுக்கு வேதத்தின் வசனங்களை கற்றுக் கொடுப்பதற்கு நாம் உற்சாகப் படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு புரியக்கூடிய வகையில் கற்றுக்கொடுத்த பயிற்றுவிக்க வேண்டும்.

- **End -**